# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 03.08.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப.(ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண்கள்.SA18192/SCIC/2022 & SA 18193/SCIC/2022**

திரு எம். செல்வம், த/பெ. முனுசாமி ....
பாரதி நகர் விரிவு
புதுப்பேட்டை, கண்ணமங்கலம்,
ஆரணி தாலுக்கா
திருவண்ணாமலை மாவட்டம் 632 311.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ பொது அதிகார அமைப்பு
காவல் துறை உதவித் தலைவர்
(பணியமைப்பு)
காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம்,
மயிலாப்பூர், சென்னை.

**ஆணை**

இவ்வழக்குகளில் 05/09/2024 அன்று காணொளி காட்சி வாயிலாக விசாரணை நடத்தப்பட்டது. அன்றைய விசாரணையின் போது மனுதாரர் ஆஜராகியிருந்தார். பொது அதிகார அமைப்பின் சார்பில், பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திருமதி.S.பிரபாவதி, முதன்மை நிர்வாக அலுவலர், காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம், மயிலாப்பூர், சென்னை-4 அவர்கள் ஆஜரானார். மேற்குறிப்பிட்ட SA 18192/SCIC/2022 & SA 18193/SCIC/2022 ஆகிய இரண்டு வழக்குகளிலும், மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005, பிரிவு 6(1)-ன் படியான மனு ஒரே பொருண்மையைக் கொண்டிருந்ததால், அவை

ஒருங்கியலாக விசாரணை செய்யப்பட்டது. அதற்கான ஆணை 14/10/2024 அன்று கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கப்பட்டது.

"இந்நிலையில் இவ்வழக்குகளின் மீது 05.09.2024 அன்று காணொளி காட்சி மூலமாக விசாரணை மேற்கொள்ள வேண்டி மனுதாரரை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகுமாறும், பொதுத் தகவல் அலுவலரை தமிழ்நாடு தகவல் ஆணையம், சென்னை முன் நேரடியாக ஆஜராகுமாறும் தெரிவித்து அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் இவ்வழக்குகள் 05.09.2024 அன்று காணொளி காட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

05.09.2024 அன்று நடத்தப்பட்ட காணொளி காட்சி விசாரணைக்கு மனுதாரர் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகியிருந்தார். பொதுத் அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி திருமதி S. பிரபாவதி, உதவிப் பொதுத் தகவல் அலுவலர், காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் விசாரணைக்கு ஆஜராகியிருந்தார். இரு வழக்குகளும் ஒரே பொருள் கொண்டவை என்பதால் ஒரு சேர விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

05.09.2024ன் விசாரணைக்கு ஆஜராகியிருந்த உதவிப் பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் மனுவானது பிரிவு 6(3)ன் கீழ் மாற்றம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் பொதுத் தகவல் அலுவலர் /கூடுதல் காவல் கண்காணிப்பாளர், திருவண்ணாமலை அவர்களால் மனுதாரருக்கு 15.11.2022 தேதியிட்ட கடிதத்தின் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அதன் நகல்கள் ஆணையத்தின் முன் சமர்பிக்கப்பட்டது. மனுதாரருக்கு வழங்கப்பட்ட 15.11.2022 தேதியிட்ட கடிதத்தில் திரு பி. ஸ்டீபன், பொதுத் தகவல் அலுவலர்/கூடுதல் காவல் கண்காணிப்பாளர், திருவண்ணாமலை அவர்கள் மனுதாரரால் குறிப்பிடப்பட்ட 19.04.2022 தேதியிட்ட மனுவானது மாவட்ட காவல் அலுவலகத்தில் பெறப்பட்டதாக குறிப்புகள் ஏதும் இல்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதே திரு பி. ஸ்டீபன், பொதுத் தகவல் அலுவலர் அவர்களால் 01.12.2022 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் மனுதாரரால் குறிப்பிடப்பட்ட 09.04.2022 நாளிட்ட கடிதத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் இனம் வாரியாக தகவல்களும் வழங்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது"

**"15.11.2022 தேதியிட்டு மனுதாரருக்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டதற்காக திரு பி. ஸ்டீபன், பொதுத் தகவல் அலுவலர்/ கூடுதல் காவல் கண்காணிப்பாளர், திருவண்ணாமலை அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) மற்றும் 20 (2)-ன்கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை பொதுத் தகவல் அலுவலர், காவல் துறை தலைமை அலுவலகம், சென்னை அவர்கள் மேற்குறிப்பிட்ட அலுவலரிடமிருந்து பெற்று ஆணையத்திற்கு 16/10/2024 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டது.**

**01.12.2022 தேதியிட்டு வழங்கப்பட்ட தகவல்கள் தவறானவை என மனுதாரரால் தெரிவிக்கப்பட்டது. அவை ஆணையத்தால் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.”**

**மேற்குறிப்பிட்டவாறு வழக்கானது 16.10.2024 பதிலாக 14.10.2024 (இன்று) எடுத்துக் கொள்ளப்பட்டது. பொதுத் தகவல் அலுவலருக்கு பதிலாக அவரது பிரதிநிதி திரு சரவணன், Administrative Officer, காவல் துறை தலைமை அலுவலகம், சென்னை அவர்கள் நேரில் ஆஜராகி ஆணையம் உத்தரவிட்டவாறு திரு பி. ஸ்டீபன், பொதுத் தகவல் அலுவலர்/கூடுதல் காவல் கண்காணிப்பாளர், திருவண்ணாமலை (தற்போது கூடுதல் காவல் துணை ஆணையாளர், மத்திய குற்றப்பிரிவு, ஆவடி காவல் ஆணையரகம், ஆவடி, சென்னை) அவர்களின் விளக்கத்தை சமர்பித்தார். எனவே மேற்குறிப்பிட்ட வழக்குகள் முற்றாக்கி ஆணையிடப்படுகிறது”**

2. மேற்குறிப்பிட்டவாறு இவ்வழக்குகளை, ஆணையம் 16.10.2024-க்கு முன்னதாக 14.10.2024 அன்று எடுத்துக் கொண்டது. அன்று, பொது அதிகார அமைப்பின் சார்பில், பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு எஸ்.சரவணன், நிர்வாக அதிகாரி, காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம், மயிலாப்பூர், சென்னை அவர்கள் நேரில் ஆஜராகி ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு திரு பி. ஸ்டீபன், பொதுத் தகவல் அலுவலர்/ கூடுதல் காவல் கண்காணிப்பாளர், திருவண்ணாமலை (தற்போது கூடுதல் காவல் துணை ஆணையாளர், மத்திய குற்றப்பிரிவு, ஆவடி காவல் ஆணையரகம், ஆவடி, சென்னை) அவர்களின் விளக்கத்தை சமர்ப்பித்தார்.

3.அவ்விளக்கத்தை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு 20/05/2026 அன்று கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

**“மேற்குறிப்பிட்டவாறு திரு பி. ஸ்டீபன், முன்னாள் பொதுத் தகவல் அலுவலர், அவர்களின் விளக்கம் ஆணையத்தால் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. அவரது விளக்கத்தினை ஆணையத்தால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. எனவே திரு. பி. ஸ்டீபன் முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் (தற்போது கூடுதல் காவல் துணை ஆணையாளர், மத்திய குற்றப்பிரிவு, ஆவடி காவல் ஆணையரகம், ஆவடி, சென்னை) அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தினை தனது பிரதிநிதி மூலமாக ஆணையத்திற்கு 30/06/2026 அன்று சமர்பிக்க வேண்டும் என ஆணையாளர், ஆவடி காவல் ஆணையரகம், ஆவடி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.”**

**3.** ஆணையத்தின் மேற்குறிப்பிட்ட உத்தரவின் அடிப்படையில் காவல் ஆணையாளர், ஆவடி காவல் ஆணையரகம், ஆவடி அவர்கள் 02/07/2026 தேதியிட்டு ஆணையத்திற்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளார். அவ்வறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

**“ மனுதாரரான திரு.எம். செல்வம் என்பவருக்கு திரு.ஸ்டீபன், கூடுதல் துணை ஆணையாளர், மத்திய குற்றப்பிரிவு, ஆவடி காவல் ஆணையரகம், முன்னர் பொதுத் தகவல் அலுவலராக திருவண்ணாமலை மாவட்டத்தில் பணியாற்றிய போது வழங்கப்பட்ட தகவல் என்பதால் மேற்கண்ட பொருள்**

குறித்து தகவல் ஆணையத்திற்கு நேரடியாக அறிக்கை அனுப்ப கோரி 18/06/2026 நாளிட்ட தமது அலுவலக குறிப்பாணையின் மூலம் காவல் கண்காணிப்பாளர், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில், விசாரணை மேற்கொண்டு அனுப்பியுள்ள அறிக்கையில், திரு.ஸ்டீபன், கூடுதல் காவல் துணை ஆணையாளர், மத்திய குற்றப்பிரிவு, ஆவடி காவல் ஆணையரகம் முன்னர் பொதுத் தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்) திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் மனுதாரரது புகார் மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை மனுதாரரின் த.அ.உ.ச. மனுவில் கோரப்பட்டுள்ளவாறு இனம் வாரியாக மனுதாரருக்கு 01/12/2022 அன்று தாமதமின்றி உரிய காலத்திற்குள் தெரிவித்துள்ளார் எனவும், இதன் தொடர்பாக தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொதுத் தகவல் அலுவலர் அவர்களின் விளக்கத்தை பெற்றுக் கொண்டு கடந்த 14/10/2024-ம் தேதி மேற்படி வழக்குகளை முற்றாக்கம் செய்து ஆணை பிறப்பித்துள்ளது எனவும் காவல் கண்காணிப்பாளர், திருவண்ணாமலை மாவட்டம் தெரிவித்துள்ளார்.

எனவே, திரு.ஸ்டீபன், கூடுதல் காவல் துணை ஆணையாளர், மத்திய குற்றப்பிரிவு, ஆவடி காவல் ஆணையரகம், முன்னர் பொதுத் தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்), திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் மீதான துறை ரீதியான நடவடிக்கை தேவையில்லாத காரணத்தினால், காவல் கண்காணிப்பாளர், திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் 29/06/2026 தேதியிட்ட அறிக்கையின்படி, இவ்வழக்கினை முற்றாக்கம் செய்ய பரிந்துரை செய்து பணிந்தனுப்பப்படுகிறது. ”

4. மேற்குறிப்பிட்ட காவல் ஆணையாளர், ஆவடி காவல் ஆணையரகம், ஆவடி அவர்களின் 02/07/2026 தேதியிட்ட அறிக்கையினை ஆணையத்தால் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எனவே, திரு.ஸ்டீபன், கூடுதல் காவல் துணை ஆணையாளர், மத்திய குற்றப்பிரிவு, ஆவடி காவல் ஆணையரகம் முன்னர் பொதுத் தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்) திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் மீதான ஆணையத்தின் நடவடிக்கை கைவிடப்படுகிறது. ஆகவே, இவ்விரண்டு, இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களின் மீதான வழக்குகளின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண்கள். SA 18192/SCIC/2022 & SA 18193/SCIC/2022</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

1.காவல் ஆணையாளர்
ஆவடி காவல் ஆணையரகம்,
ஆவடி, சென்னை 54.

2.பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துறை உதவித் தலைவர்
(பணியமைப்பு)
காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம்,
மயிலாப்பூர், சென்னை.

3. திரு பி. ஸ்டீபன்,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
கூடுதல் காவல் துணை ஆணையாளர்,
மத்திய குற்றப்பிரிவு,
ஆவடி காவல் ஆணையரகம்,
ஆவடி, சென்னை

**<u>மனுதாரர்</u>**

திரு எம். செல்வம், த/பெ. முனுசாமி
எண்.1169 K.M.A Nagar,
பாரதி நகர் விரிவு
புதுப்பேட்டை, கண்ணமங்கலம்,
ஆரணி தாலுக்கா,
திருவண்ணாமலை மாவட்டம் 632 311.

RG/Sr.PC